**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, நாமக்கல்</u>**

**முன்னிலை :திரு.S.தினேஷ்குமார், B.A., B.L.,**
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 24–ம் நாள் புதன்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 459/2025</u>**

**(CNR No. TNNM02-002832-2025)**

தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளார்,
வேலகவுண்டம்பட்டி காவல் நிலையம்,
நாமக்கல் மாவட்டம்.
குற்ற எண்.54/2025. – குற்றமுறையீட்டாளர்

// எதிராக //

ரங்கராஜன் (வயது 42),
த/பெ.பழனிசாமி,
3/94, பூசாரிப்பட்டி புதுர்,
கூடச்சேரி அஞ்சல்,
பரமத்தி வேலூர் வட்டம்,
நாமக்கல். – எதிரி

| **நிகழ்வு** | **முறையீடு** | **கைதுஅல்லது முன்னிலை** | **பிணையின் பேரில் விடுதலை** | **விசாரணையின் தொடக்கம்** | **விசாரணை முடிவு** | **தண்டனை அல்லது ஆணை** | **தாமத்திற் கான விளக்கம்** |
|---|---|---|---|---|---|---|---|
| 22.04.2025 | 22.04.2025 | 28.04.2025 | 28.04.2025 | 12.05.2026 | 15.06.2026 | விடுதலை | -- |

**<u>மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ம் தேதியிட்ட R.O.C. No.814/2020/RG/F1 ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 ன் கீழ் விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்றம் காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | -- |
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 14.10.2025 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்க மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | -- |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 240 பிரிவின் கீழ் வினவிய நாள் | 02.03.2026 |

| | | |
|---|---|---|
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் சுருக்கம் | ---- |
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம்: | |

| சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|
| அ.சா.1 | 12.05.2026 | 12.05.2026 |
| அ.சா.2 | 12.05.2026 | 12.05.2026 |
| அ.சா.3 | 12.05.2026 | 12.05.2026 |
| அ.சா.4 | 19.05.2026 | 19.05.2026 |
| அ.சா.5 | 19.05.2026 | 19.05.2026 |
| அ.சா.6 | 08.06.2026 | 08.06.2026 |

| | | |
|---|---|---|
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | 15.06.2026 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய / ஆஜர்படுத்தப்பட்டநாள் | ---- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் அதன் விவரம் மற்றும் தீர்வு | --- |

இவ்வழக்கானது கடந்த 14.10.2025–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 15.06.2026–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. R.சிவக்குமார்** அவர்களும் ஆஜராகி எடுத்துரைத்தும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

**<u>1. குற்ற இறுதியறிக்கையின் படி அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-</u>**

**(1.1)** கடந்த 22.04.2025 ம் தேதி நிகழ்நிலை புகார்தாரரின் கணவர் கருப்பண்ணன் என்பவர் சொந்த வேலையாக வேலகவுண்டம்பட்டி செல்ல வேண்டி அவரிடம் இருந்த TN 07 BC 1252 என்ற எண்ணுள்ள TVS XL வண்டியை எடுத்துக்கொண்டு திருச்செங்கோடு – நாமக்கல் மெயின் ரோட்டில் மதியம் சுமார் 01.15 மணிக்கு மணிக்கட்டிபுதூர் HP பெட்ரோல் பங்க் அருகில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சாலையை கடந்து நாமக்கல் – திருச்செங்கோடு ரோட்டில் வலதுபுறம் திரும்பி சாலையின் ஓரமாக சென்றபோது, மேற்படி ரோட்டில் TVS XL வண்டிக்கு பின்னால் நாமக்கல்லில் இருந்து திருச்செங்கோடு நோக்கி சென்ற TN 88 Q 5190 BENZEGLS-450 காரின் ஓட்டுநரான எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து நிகழ்நிலை புகார்தாரரின் கணவரான கருப்பண்ணன் வண்டி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியும், மேற்படி விபத்தில் எதிரி நிகழ்நிலை புகார்தாரரின் கணவருக்கு தலையில் பலத்த இரத்த காயமும், இடது கை மற்றும் இடது காலில் சிராய்ப்பு காயமும் உண்டாக்கி இறப்பை ஏற்படுத்தியதாகவும் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1)BNS ன் கீழ் வேலகவுண்டம்பட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**(1.2)** குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்குப்பின் மேற்படி வழக்கு எண்ணில் எதிரிக்கு எதிராக 14.10.2025 ம் தேதி இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. அழைப்பாணையை பெற்றுக்கொண்டு இந்நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிக்கு குற்ற இறுதி அறிக்கை மற்றும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் சட்டப்பிரிவு 230 BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**(1.3)** எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கிய பின்பு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுகள் வனைய முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1)BNS ன் கீழ்

குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிக்கு புரியும் படி தமிழ்மொழியில் குற்றச்சாட்டுகள் விளக்கி கூறி வினவிய போது எதிரி பொய் வழக்கு என்று குற்றத்தை மறுத்து வழக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று கூறினார்.

**2.** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து சான்றாவணங்களிலிருந்தும் தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்** :

**(3.1)** நிகழ்நிலை புகார்தாரர் – அ.சா.1 இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன கருப்பண்ணன் என்பவரின் மனைவி ஆவார். அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 22.04.2025 ம் தேதி மதியம் 03.15 மணியளவில் இறந்துபோன தனது கணவர் கருப்பண்ணன் TVS XL வாகனத்தில் கணக்கம்பாளையத்தில் இருந்து கிளம்பி வேலக்கவுண்டம்பட்டி சென்று கொண்டிருந்தபோது மணிக்கட்டிபுதூர் பெட்ரோல் பங்க் அருகே சென்றபோது, எதிர் திசையில் வந்த கார் தனது கணவர் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், அருகில் இருந்தவர்கள் அலைபேசி வாயிலாக விபத்து பற்றி தகவல் கொடுத்ததாகவும், தான் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவர் சுயநினைவின்றி இருந்தார் என்றும், பின்னர் அன்றே இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1ன் மூலமாக புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தை கேள்விப்பட்டு, மருத்துவமனைக்கு சென்றத பற்றியும், பிரேத விசாரணை சாட்சிகளாக உடனிருந்தது பற்றி கூறும் சாட்சிகளாக அ.சா.2 மற்றும் அ.சா.3 விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், அ.சா.3 பார்வை மகஜர் சாட்சியாக இருந்தது பற்றி சாட்சயிமளித்துள்ளார். அ.சா.3 ன் மூலம் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும், அ.சா.4 மற்றும் அ.சா.5 சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றியும், காயம்பட்டவரை சிகிச்சைக்காக அனுப்பி வைத்தது பற்றி கூறும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

**(3.2)** இவ்வழக்கினை விரைந்து முடிக்கும் பொருட்டு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.கைலேஷ்வரன் என்பவர் இறந்துவிட்டதால் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.இந்திராணி காவல் ஆய்வாளர் பொறுப்பு வேலகவுண்டம்பட்டி காவல் நிலையம் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.தேவி ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு பரிட்சையம் என்று வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் திருமதி.வேதபிறவி அவர்கள் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், பிரேத விசாரணை அறிக்கை, பிரேத பரிசோதனை அறிக்கை, இரண்டு மோட்டார் வாகனங்களின் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4. எதிரியை BNSS–2023 பிரிவு 351(1)(பி) பிரிவின் கீழ் வினவுதல்:–**

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிராக தோன்றும் சங்கதிகள் குறித்து எதிரியிடம் BNSS–2023 பிரிவு 351(1)(பி) பிரிவின் கீழ் வினவிய போது அவற்றை எதிரி பொய்சாட்சி என்று கூறியதோடு தனது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களோ சான்றுபொருட்களோ குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

**5. ஆய்வுக்குரிய பிரச்சனை:–**

**(5.1)** இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1)BNS ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

**6. தீர்வு:–**

**6.1** BSA சட்டப் பிரிவு 53 ஆனது "53. Facts admitted need not be proved" என்று கூறுகிறது. சட்டம் பிரிவு 53–BSAயை இவ்வழக்கில் பொருத்தி பார்க்கையில், எதிரி தரப்பில் இவ்வழக்கு விபத்து ஏற்பட்டதையோ, மேறப்டி விபத்தில் நிகழ்நிலை புகார்தாரரின் கணவர் காயமுற்ற இறந்துபோனதையோ மறுக்கவில்லை. ஆனால் விபத்து ஏற்படுத்திய TN 88 Q 5190 என்ற BENZEGLS–450 என்ற காரினை எதிரி

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தில் வந்த அ.சா.1ன் கணவரின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்ற குற்றச்சாட்டை மட்டும் எதிரி மறுத்துள்ளார். ஆகவே இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று மோதி விபத்து ஏற்படுத்தினாரா? இல்லையா? என்பது மட்டும் இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

**6.2.** அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அதில் அ.சா.4 மற்றும் 5 இவ்வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்பதால் அ.சா.4 மற்றும் 5 சாட்சிகளின் சாட்சியம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

**7.1.** இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 தனது முன் விசாரணை சாட்சியத்தில் கடந்த 22.04.2025 ம் தேதி மதியம் 01.15 முதல் 1.30 மணியளவில் கருப்பண்ணன் என்பவர் TVS XL இருசக்கர வாகனத்தில் கணக்கம்பாளையத்தில் இருந்து மணிக்கட்டிப்புதூர் மெயின் ரோடு ஏறி நாமக்கல் – திருச்செங்கோடு நோக்கி சென்றுகொண்டிருந்ததாகவும், அவருக்கு பின்னால் வேகமாக வந்த கார் கருப்பண்ணன் வாகனத்தின் மீது மோதியதில் அவருக்கு தலையில் பலமாக அடிப்பட்டதாகவும், உடம்பிலும் காயம் ஏற்பட்டதாகவும், அருகில் இருந்தவர்கள் உதவியுடன் தாங்கள் அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**7.2.** இவ்வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 தனது முன் விசாரணை சாட்சியத்தில் கடந்த 22.04.2025ம் தேதி மதியம் 01.15 மணியளவில் தான் மணிக்கட்டிப்புதூரில் உள்ள HP பெட்ரோல் பங்கிற்கு அருகில் உள்ள மளிகை கடைக்கு பொருட்கள் வாங்க வந்திருந்ததாகவும், தங்கள் ஊரைச்சேர்ந்த கருப்பண்ணன் என்பவர் TVS XL இருசக்கர வாகனத்தில் கணக்கம்பாளையத்தில் இருந்து மணிக்கட்டிப்புதூர் மெயின் ரோடு ஏறி நாமக்கல் – திருச்செங்கோடு ஏறி வேலக்கவுண்டம்பட்டி நோக்கி சென்றுகொண்டிருந்ததாகவும், அவருக்கு பின்னால் ஓரளவிற்கு வேகமாக வந்த கார் கருப்பண்ணன் வாகனத்தின் மீது மோதியதில்

அவருக்கு தலையில் பலமாகவும், இடதுகை, இடது காலிலும் காயம் ஏற்பட்டதாகவும், அருகில் இருந்தவர்கள் உதவியுடன் தானும், தனது தம்பி அ.சா.4ம் அடிப்பட்ட நபரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**7.3.** மேலும், இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விபத்து பற்றி கேள்விப்பட்ட சாட்சிகள் ஆவார்கள். இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் தனது கணவர் TVS XL வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது எதிர் திசையில் வந்த கார் தனது கணவர் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், அருகில் இருந்தவர்கள் அலைபேசி வாயிலாக விபத்து பற்றி தகவல் கொடுத்ததாகவும் மட்டுமே சாட்சியமளித்துள்ளார். அதேபோல விபத்து கேள்விப்பட்டதாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3, அ.சா.1யை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார்கள். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனமானது அஜாக்கிரதையாகவோ (rash) அல்லது அதிவேகமாகவோ (high speed) அல்லது கவனக்குறைவாகவோ (negligently) வந்து விபத்து ஏற்படுத்தியது என்றும் சாட்சியமும் அளிக்கவில்லை.

**7.4.** மேலும், சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 மற்றும் அ.சா.5 தங்களது குறுக்கு விசாரணையில் விபத்து ஏற்படுத்திய வாகனம் ரோட்டில் நேராகத்தான் வந்து கொண்டிருந்தது என்றும், மேற்படி ரோட்டை கருப்பண்ணன் தான் கடந்து வந்தார் என்றால் சரி என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒப்புதல், இறந்தவர் பிரதான சாலையினை கருப்பண்ணன் கடந்தது தான் விபத்திற்குக் காரணம் என்பதையும், எதிரியின் அஜாக்கிரதையான வாகன ஓட்டுதல் அல்ல என்பதையும் காட்டுகிறது. ஒரு வாகனம் மற்றொரு வாகனத்தின் மீது அல்லது பிறநபர்கள் மீது மோதியது என்ற காரணத்தினால் மட்டும் சட்டப்பிரிவு 281 BNS–ன் கீழ் குற்றம் தானாகவே நிரூபிக்கப்பட்டுவிடாது. குற்றம்சாட்டப்பட்டவர் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் அஜாக்கிரதையாக அல்லது கவனக்குறைவாக வாகனத்தை இயக்கினார் என்பது அரசு

தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில் விபத்தை கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 மற்றும் அ.சா.5 தங்களது சாட்சியத்தில் எதிரி பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் அஜாக்கிரதையாக அல்லது கவனக்குறைவாக வாகனத்தை இயக்கி விபத்து ஏற்படுத்தினார் என்று எதுவும் தங்களது சாட்சியத்தில் சொல்லாத காரணத்தாலும், குறிப்பாக அ.சா.4 மற்றும் அ.சா.5 தங்களது குறுக்கு விசாரணையில் விபத்து ஏற்படுத்திய வாகனம் ரோட்டில் நேராகத்தான் வந்து கொண்டிருந்தது என்றும், மேற்படி ரோட்டை கருப்பண்ணன் தான் கடந்து வந்தார் என்றால் சரி என்றும் ஒப்புக்கொண்டுள்ள காரணத்தாலும் அரசு தரப்பு வழக்கில் கண்டுள்ளது போல எதிரி அஜாக்கிரதையாக அல்லது கவனக்குறைவாக வாகனத்தை இயக்கி விபத்து ஏற்படுத்தினார் என்று சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமனறம் முடிவுக்கு வருகிறது.

**7.5.** இவ்வழக்கில் முதற்கட்ட புலனாய்வு அதிகாரிகளான காவல் உதவி ஆய்வாளர் திரு.கைலேஷ்வரன் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.இந்திராணி ஆகியோர்களுக்கு பதிலாக கூடுதல் சாட்சியாக காவல் ஆய்வாளர் திருமதி.வேதபிறவி அரசு தரப்பில் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.6 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.6ன் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும், விபத்திற்குள்ளான வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, அ.சா.6ன் சாட்சியமானது வழக்கிற்கு பின்னிட்ட சங்கதிகளை உறுதிப்படுத்த இயலுமே ஒழிய, விபத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 மற்றும் அ.சா.5 மற்றும் நேரில் கேள்விப்பட்ட சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளும் எதிரி விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை அஜாக்கிரதையாக அல்லது கவனக்குறைவாக இயக்கி விபத்து ஏற்படுத்தினார் என்று சாட்சியமளிக்கவில்லை என்பதால், அ.சா.6ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி விபத்தை ஏற்படுத்திய

வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்ற எதிரிக்கு எதிரான சட்டப் பிரிவு 281 BNSன் கீழான குற்றச்சாட்டு எதிரிக்கு எதிராக நிரூபிக்கப்பட்டுவிட்டது என்று கூற இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. ஆகவே, எதிரி விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்ற எதிரிக்கு எதிரான சட்டப் பிரிவு 281 BNS ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாத நிலையில் எதிரிக்கு எதிரான சட்டப் பிரிவு 106(1) BNSன் கீழான குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**8.** ஆகவே மேற்படி பொருண்மைகளை பரிசீலித்து பார்க்கையில் விப்ததில் இறந்துபோன கருப்பண்ணன் TN 07 BC 1252 என்ற எண்ணுள்ள TVS XL இருசக்கர வாகனத்தில் திருச்செங்கோடு – நாமக்கல் மெயின் ரோட்டில் மணிக்கட்டிபுதூர் HP பெட்ரோல் பங்க் அருகில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சாலையை கடந்து நாமக்கல் – திருச்செங்கோடு ரோட்டில் வலதுபுறம் திரும்பி சாலையின் ஓரமாக சென்றபோது, மேற்படி விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்திற்கு பின்னால் நாமக்கல்லில் இருந்து திருச்செங்கோடு நோக்கி சென்ற TN 88 Q 5190 BENZEGLS–450 காரின் ஓட்டுநரான எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து கருப்பண்ணன் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்ற சட்டப் பிரிவு 281 BNSன் கீழான குற்றச்சாட்டும், மேறப்டி விபத்தினால் கருப்பண்ணன் இறப்பதற்கு எதிரி காரணமாக இருந்துள்ளார் சட்டப் பிரிவு 106(1) BNSன் கீழான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**9.** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் வழக்கு சொத்தை பற்றிய உத்தரவு ஏதும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 24 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–S.தினேஷ்குமார்)
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

**அட்டவணை :**

**அரசுத்தரப்பு சாட்சிகள் :**

| சாட்சியின் வரிசை | சாட்சியின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | திருமதி.காளியம்மாள் |
| அ.சா.2 | திரு.துரைசாமி |
| அ.சா.3 | திரு.ராஜா |
| அ.சா.4 | திரு.காளியண்ணன் |
| அ.சா.5 | திரு.கருப்பண்ணன் |
| அ.சா.6 | திருமதி.வேதபிறவி |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள் :**

| சான்றாவணங்களின் வரிசை | நாள் | சான்றாவணங்களின் விபரம் | குறியீடு செய்யப்பட்ட சாட்சியின் விவரம் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 22.04.2025 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 22.04.2025 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | 22.04.2025 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.4 | 22.04.2025 | பார்வை மகஜர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | 22.04.2025 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.6 | 22.04.2025 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.6 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.7 | 22.04.2025 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.8 | 29.04.2025 | TN 88 Q 5190 என்ற பதிவெண் கொண்ட BENZEGLS-450 காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.9 | 21.08.2025 | TN 07 BC 1252 என்ற பதிவெண் கொண்ட TVS XL Super Heavy Duty இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.6 |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்</u>** : இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை.

(ஒம்/-S.தினேஷ்குமார்)
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

**<u>குறிப்பு :-</u>**

1. தீர்ப்பு பற்றிய தகவல் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

**<u>நகல்</u>**

1)மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.